# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 303/2023
# வழக்கு சாட்சி PW-6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்ராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராஜ் | தொழில் | : | பெட்ரோல் பல்க்கில் வேலை |
| கிராமம் | : | கருவந்தா | வயது | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 30th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்ரோல் பல்க்கில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 07.07.2021 அன்று ஊத்துமலை காவல்நிலைய ஆய்வாளர் எதிரி அருண்முருகன், லிங்கசாமி ஆகியோர்களை சோலைச்சேரி பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்தார். நானும், சுபாகரனும் சங்கரன்கோவிலுக்கு வேலையாக சென்றபோது அங்கு நின்று கொண்டிருந்தோம். எதிரி அருள்முருகன் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அதற்கு நான் சாட்சியாக இருக்க ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து போட்டேன். சோலைச்சேரி பஸ்ஸ்டாப்பில் வைத்து மஞ்சள் பையில் வைத்திருந்த அரிவாளை எதிரி அருண்முருகன் எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.31 19:17:00 +0530